பிரசார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை-4

10 11 2025 12 40

திங்கட்கிழமை நண்பகல்

<u>தலைப்புச் செய்திகள்</u>

- 2026-27ஆம் நிதியாண்டுக்கான பட்ஜெட்டிற்கு முந்தைய ஆலோசனைக் கூட்டம் மத்திய நிதியமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமன் தலைமையில் இன்று நடைபெற்றது.

- பிஹாரில் இரண்டாவது மற்றும் இறுதிக்கட்ட வாக்குப்பதிவு நாளை நடைபெற உள்ள நிலையில் அதற்கான முன்னேற்பாட்டுப் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

- முல்லைப்பெரியாறு அணையின் பாதுகாப்பு தொடர்பாக தேசிய அணைகள் பாதுகாப்பு ஆணைய கண்காணிப்புக் குழுவினர் இரண்டாவது முறையாக அணையில் ஆய்வு மேற்கொண்டு வருகின்றனர்.

- மத்தியப்பிரதேசம், சத்தீஸ்கட், ஜார்கண்ட் மாநிலங்களில் அடுத்த 2 நாட்களுக்கு கடும் குளிர் நிலவக்கூடும் என்று வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

- ஆந்திர அணிக்கு எதிரான ரஞ்சிக் கோப்பை கிரிக்கெட் போட்டியில் தமிழக அணி இரண்டாவது இன்னிங்சை ஆடி வருகிறது.

--- இனி விரிவான செய்திகள் -----

<<<<>>>>

2026-27ஆம் நிதியாண்டுக்கான பட்ஜெட்டிற்கு முந்தைய ஆலோசனைக் கூட்டம் மத்திய நிதியமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமன் தலைமையில் இன்று நடைபெற்றது.

புதுதில்லியில் நடைபெற்ற முதலாவது கூட்டத்தில் முதன்மைப் பொருளாதார ஆலோசகர் திரு. அனந்த நாகேஸ்வரன், பொருளாதார விவகாரத் துறையைச் சேர்ந்த உயரதிகாரிகள் மற்றும் பொருளாதார நிபுணர்கள் கலந்துகொண்டனர்.

இக்கூட்டத்தைத் தொடர்ந்து பல்வேறு தொழில்துறை பிரதிநிதிகளுடன் வரும் காலங்களில் பட்ஜெட்டுக்கு முந்தைய ஆலோசனை கூட்டம் நடைபெறும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

<<<<>>>>

பிஹாரில் இரண்டாவது மற்றும் இறுதிக்கட்ட தேர்தல் நாளை நடைபெற உள்ள நிலையில் அதற்கான முன்னேற்பாட்டுப் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

20 மாவட்டங்களில் இடம்பெற்றுள்ள 122 தொகுதிகளில் நாளை வாக்குப்பதிவு நடைபெறுகிறது.

ஆயிரத்து 302 வேட்பாளர்கள் களத்தில் உள்ளனர்.

3 கோடியே 70 லட்சத்திற்கும் அதிகமானோர் இதில் வாக்களிக்க தகுதி பெற்றுள்ளனர்.

வாக்குப்பதிவு காலை 7 மணிக்குத் தொடங்கி மாலை 6 மணி வரை நடைபெறும்.

பாதுகாப்பு காரணங்களுக்காக 7 தொகுதிகளில் மாலை 5 மணியுடன் வாக்குப்பதிவு நிறைவடையும் என்று தேர்தல் ஆணையம் தெரிவித்துள்ளது.

நேபாளத்தை ஒட்டிய எல்லைப் பகுதிகள், உத்தரப்பிரதேசம், மேற்குவங்கம் மற்றும் ஜார்கண்ட் மாநில எல்லைப் பகுதிகள் மூடப்பட்டு ரோந்துப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக பிஹார் காவல்துறை தலைமை இயக்குநர் திரு. வினய்குமார் கூறியுள்ளார்.

<<<<>>>>

வாக்குப்பதிவு நிறைவடையும் வரை ஜெய்நகர், நேபாளில் உள்ள ஜானக்பூர் இடையே மைத்ரி எக்ஸ்பிரஸ் ரயில் சேவை நிறுத்தப்படுவதாக அறிவித்துள்ளது.

தேர்தல் ஆணையம் சார்பில் 20 மாவட்டங்களின் தலைநகரங்களில் தேர்தல் நடைமுறைகளைக் கண்காணிக்க கட்டுப்பாட்டு அறை அமைக்கப்பட்டுள்ளது.

595 வாக்குச்சாவடிகளை மகளிரும், 21 வாக்குச்சாவடிகளை மாற்றுத்திறனாளிகளும் நிர்வகிப்பார்கள் என்று தேர்தல் ஆணையம் தெரிவித்துள்ளது.

இந்த இரண்டாம் கட்டத் தேர்தலில் தேசிய ஜனநாயக கூட்டணியைச் சேர்ந்த பிஜேபி 53 தொகுதிகளிலும், ஐக்கிய ஜனதாதளம் 44 தொகுதிகளிலும், லோக் ஜன்சக்தி 15 தொகுதிகளிலும் வேட்பாளர்களை நிறுத்தியுள்ளன.

ஹிந்துஸ்தானி அவாம் மோர்ச்சா 6 தொகுதிகளிலும், ராஷ்ட்ரிய லோக் மோர்ச்சா 4 தொகுதிகளிலும் போட்டியிடுகின்றன.

<<<<>>>>

எதிர்க்கட்சிகளின் ஒருங்கிணைந்த கூட்டணியைச் சேர்ந்த ராஷ்ட்ரிய ஜனதாதளம் 71 தொகுதிகளிலும், காங்கிரஸ் 37 தொகுதிகளிலும் வேட்பாளர்களை நிறுத்தியுள்ளன.

விகாஷ் ஷீல் இன்சான் கட்சி 8 தொகுதிகளிலும், CPI-ML 6 தொகுதிகளிலும் போட்டியிடுகின்றன.

இந்திய கம்யூனிஸ்ட் 4 தொகுதிகளிலும், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி ஒரு தொகுதியிலும் போட்டியிடுகின்றன.

இத்துடன் 7 மாநிலங்களில் உள்ள 8 சட்டப்பேரவைத் தொகுதிகளுக்கும் நாளை இடைத்தேர்தலுக்கான வாக்குப்பதிவு நடைபெறுகிறது.

ஜம்மு-கஷ்மீரில் பட்காம், நக்ரோட்டா, ராஜஸ்தானில் Anta, ஜார்கண்டில் Ghattsila, தெலங்கானாவில் ஜூப்ளிஹில்ஸ், பஞ்சாபில் Tarn Taran, மிசோரமில் Dampa மற்றும் ஒடிசாவில் Nuapada ஆகிய சட்டப்பேரவைத் தொகுதிகளில் இடைத்தேர்தல் நடைபெறுகிறது.

வாக்கு எண்ணிக்கை இம்மாதம் 14ஆம் தேதி மேற்கொள்ளப்படுகிறது.

<<<<>>>>

நகர்ப்புற கூட்டுறவு கடன்துறை குறித்த சர்வதேச மாநாட்டை மத்திய கூட்டுறவுத்துறை அமைச்சர் திரு. அமித் ஷா இன்று புதுதில்லியில் தொடங்கி வைக்கிறார்.

இரண்டு நாட்கள் நடைபெறும் இந்த மாநாட்டை தேசிய நகர்ப்புற கூட்டுறவு வங்கிகள் மற்றும் கடன் சங்கங்கள் கூட்டமைப்பு மற்றும் கூட்டுறவு அமைச்சகம் ஆகியவை இணைந்து நடத்துகின்றன.

நாட்டில் நிதி உள்ளடக்கத்தின் கூட்டுறவு அடித்தளத்தை வலுப்படுத்துவதையும், சமூகத்தினருக்கு அதிகாரமளித்தலையும் இம்மாநாடு நோக்கமாகக் கொண்டுள்ளது.

<<<<>>>>

ஹரியானாவின் ஃபரிதாபாதில் பெருமளவிலான ஆயுதங்களும், வெடிமருந்து மற்றும் வெடிபொருட்களும் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன.

இதுகுறித்து செய்தியாளர்களிடம் பேசிய ஃபரிதாபாத் காவல்துறை ஆணையர் திரு. *Satender Kumar Gupta*, ஹரியானா மற்றும் ஜம்மு-கஷ்மீர் காவல்துறையினர் இணைந்து நடத்திய தேடுதல் நடவடிக்கைகளில் இது கைப்பற்றப்பட்டதாகவும், ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

<<<<>>>>

முல்லைப்பெரியாறு அணையின் பாதுகாப்பு மற்றும் பராமரிப்பு தொடர்பாக தேசிய அணைகள் பாதுகாப்பு ஆணைய தலைவர் திரு. அனில் ஜெயின் தலைமையிலான 7 பேர் கொண்ட கண்காணிப்புக் குழுவினர் இரண்டாவது முறையாக அணையில் ஆய்வு மேற்கொண்டு வருகின்றனர்.

அணையின் ஆய்வு குறித்த அறிக்கை உச்சநீதிமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும் என்று நீர்வளத்துறை அதிகாரிகள் கூறியதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

*(Voice Byte - 47 Sec)*

<<<<>>>>

பிரபல கவிஞரும், பாடலாசிரியருமான *Ande Sri* இன்று காலை காலமானார்.

“ஜெய ஜெயஹே தெலங்கானா” என்ற மாநில பாடலை இயற்றியவரான அவர், உடல் நலக் குறைவு காரணமாக காலமானார். அவருக்கு வயது 64.

இலக்கியத்திற்கான அவர் ஆற்றிய பங்களிப்பிற்காக தெலங்கானா அரசு அண்மையில் அவருக்கு ஒரு கோடி ரூபாய் ரொக்கப் பரிசுடன் விருது வழங்கி கௌரவித்தது.

*Ande Sri* மறைவுக்கு தெலங்கானா முதலமைச்சர் திரு. ரேவந்த் ரெட்டி, மத்திய நிலக்கரித்துறை அமைச்சர் திரு. கிஷன் ரெட்டி மற்றும் பல்வேறு அரசியல் கட்சித் தலைவர்கள் இரங்கல் தெரிவித்துள்ளனர்.

<<<<>>>>

இந்தியாவிற்கான புதிய அமெரிக்க தூதராக நியமிக்கப்பட்டுள்ள திரு. *Sergio Gor* பதவியேற்பு நிகழ்ச்சி இன்று நடைபெறுகிறது.

இதில் அமெரிக்க அதிபர் திரு. டோனல்ட் ட்ரம்ப் பங்கேற்பார் என்று வெள்ளை மாளிகை உறுதி செய்துள்ளது.

இதற்காக கடந்த மாதம் நடைபெற்ற செனட் வாக்கெடுப்பில் வெற்றி பெற்ற திரு. செர்ஜியோ கோர், இந்தியாவுக்கான மிக இளைய அமெரிக்க தூதர் என்ற பெருமையைப் பெறுகிறார்.

முன்னதாக வெள்ளை மாளிகையில் அதிபர் பணியாளர் அலுவலகத்தின் இயக்குநராக பணிபுரிந்துள்ளார்.

தெற்கு மற்றும் மத்திய ஆசிய விவகாரங்களுக்கான சிறப்புத் தூதராகவும் அவர் பணிபுரிய உள்ளார்.

புதுதில்லியில் அமெரிக்க தூதராக திரு. செர்ஜியோ கோர் விரைவில் பொறுப்பேற்பார் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

<<<<>>>>

பாலஸ்தீனத்தின் காஸா எல்லைப் பகுதியில் சண்டை நிறுத்தத்தை தொடர்ந்து கடைபிடிக்க வேண்டும் என்று எகிப்து வெளியுறவு அமைச்சர் திரு. *Badr Abdelatty*-யும், கத்தார் பிரதமரும், வெளியுறவு அமைச்சருமான திரு. ஷேக் முகமது பின் அப்துல் ரஹ்மான் அல்தானியும் வலியுறுத்தியுள்ளனர்.

இதுதொடர்பாக தொலைபேசி வாயிலாக உரையாடிய அவர்கள் காஸாவுக்கான அமெரிக்காவின் அமைதித் திட்டத்தை அமல்படுத்துவது குறித்த ஆலோசனைகளின் தற்போதைய முன்னேற்றங்கள் குறித்து அவர்கள் விவாதித்தனர்.

*பாலஸ்தீன நிர்வாகத்தின்கீழ் காஸா மற்றும் மேற்குக் கரையை ஒருங்கிணைப்பதின் அவசியம் குறித்து அவர்கள் வலியுறுத்தினர்.*

*காஸாவில் சர்வதேச படைகளை நிறுத்துவது குறித்து ஐ.நா. பாதுகாப்பு கவுன்சிலில் நடைபெற்ற விவாதங்கள் குறித்தும் அவர்கள் ஆலோசித்தனர்.*

*மேற்கு கரையில் இஸ்ரேலிய குடியேற்ற நடவடிக்கைகளை நிராகரிப்பதாக அவர்கள் தெரிவித்தனர்.*

*இத்தகைய நடவடிக்கை அமைதி மற்றும் நிலைத்தன்மைக்கு அச்சுறுத்தலை ஏற்படுத்தும் என்று எகிப்து வெளியுறவு அமைச்சரும், கத்தார் வெளியுறவு அமைச்சரும் குறிப்பிட்டுள்ளனர்.*

<<<<>>>>

*மியான்மரில் இன்று காலை லேசான நிலநடுக்கம் ஏற்பட்டது.*

*இது ரிக்டர் அளவில் 3 புள்ளி 3ஆக பதிவானது.*

<<<<>>>>

*மத்தியப்பிரதேசம், சத்தீஸ்கட், ஜார்கண்ட் மாநிலங்களில் அடுத்த 2 நாட்களுக்கு குளிர் நிலவக்கூடும் என்று வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.*

*தெற்கு ஹரியானா, நாட்டின் வடமேற்குப் பகுதியின் சில இடங்களில் அடுத்த 3 முதல் 4 நாட்களுக்கு இரவு நேர வெப்பநிலை இயல்பைவிட இரண்டு முதல் 4 டிகிரி செல்சியஸ் குறைவாக இருக்கும் என்று கூறியுள்ளது.*

*நாட்டின் வடமேற்கு பகுதிகளில் குறைந்தபட்ச வெப்பநிலை அடுத்த 3 நாட்களுக்கு 2 முதல் 3 டிகிரி செல்சியஸ் வரை குறையக்கூடும் என்றும் வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.*

<<<<>>>>

*ஆந்திர அணிக்கு எதிரான ரஞ்சிக் கோப்பை கிரிக்கெட் போட்டியில் மூன்றாம் நாளான இன்று தமிழக அணி இரண்டாவது இன்னிங்சில் சற்றுமுன் வரை 6 விக்கெட் இழப்புக்கு 175 ரன் எடுத்துள்ளது.*

விசாகப்பட்டினத்தில் நடைபெற்று வரும் இப்போட்டியில் ஆந்திர அணி இரண்டாவது இன்னிங்சில் 177 ரன்னுக்கு ஆட்டமிழந்தது.

தமிழக அணியின் முதல் இன்னிங்ஸ் ஸ்கோர் 182 ரன்.

<<<<>>>>